செய்தி வெளியீடு எண்:326/2018 நாள்: 7 .06.2018

## பள்ளிக்கு உரிய நேரத்தில் வராத ஆசிரியர்கள் மீது நடவடிக்கை பாயும்!

## வேலூர் மாவட்டத்தில் தேர்ச்சி விகிதம் குறைவான பள்ளிகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் திடீர் ஆய்வு!!

வேலூர் மாவட்டத்தில் தேர்ச்சி விகிதம் குறைவாக உள்ள கொணவட்டம் அரசுப் பள்ளியில் மாணவ மாணவர்களின் கற்றல் திறன் மற்றும் ஆசிரியர்கள் பாடம் கற்பிக்கும் முறை ஆகியவற்றை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

இவ்வாய்வின் போது மாணவ மாணவிகளை வாசிக்க செய்து அவர்களின் வாசித்தல் திறனை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பார்வையிட்டார். மேலும் பன்னிரண்டாம் வகுப்பு வகுப்பறையில் மாணவ மாணவிகளுடன் சேர்ந்து அமர்ந்து ஆசிரியர் மாணவ மாணவிகளுக்கு வேதியியல் பாடம் கற்பிப்பதனை ஆய்வு செய்தார். பின்னர் மாணவ மாணவிகளிடம் பேசும் போது முன்பெல்லாம் ஆங்கிலமே ஆற்றல் என்ற நிலை மாறி தற்போது அறிவே ஆற்றல் என்ற உயர்ந்த நிலையில் கல்வி இருக்கிறது. இன்றைய நவீன உலகில் கற்றல் அறிவு இருந்தால் எல்லா மேற்படிப்புகளையும் கற்று தேர்ந்து விடலாம். மேலும் தமிழக அரசு மாணவ மாணவிகளுக்கு விலையில்லா நோட்டு புத்தகங்கள், சீருடைகள், சத்துணவுத் திட்டம் போன்ற எண்ணற்ற நலத்திட்ட உதவிகளை செய்து வருகிறது. ஆசிரியர்களும் மாணவ மாணவிகளின் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து தங்களது பங்களிப்பை வழங்கி வருகிறார்கள். இவற்றை இன்றைய தலைமுறையினர் நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு உயர் கல்வியை கற்று நாம் படிக்கும் பள்ளிக்கும், வீட்டிற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்த்திட உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். வேலூர் மாவட்டத்தை கல்வியில் மற்ற மாவட்டங்களை காட்டிலும் சிறந்த மாவட்டமாக முன்னேற்றும் நோக்கோடு அரசுப் பள்ளிகளில் கற்பிக்கும் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் முழு முயற்சியுடன் செயல்பட வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

வேலூர் மாவட்டத்தில் 6 மற்றும் 9ஆம் வகுப்பு தமிழ் வழிக்கல்வி பயிலும் மாணவ மாணவிகளில் வாசிப்புப் திறன் குறைவாக உள்ள மாணவ மாணவிகளை கண்டறிந்து ஒரு மாதத்திற்குள் இணைப்புப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யவும், அதற்காக தமிழ் ஆசிரியர்களுக்கு வகுப்பு பிரித்து வழங்க தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் தேர்ச்சி விகிதம் குறைவாக உள்ள பள்ளிகளின் ஆசிரியர்களிடம் தேர்ச்சி விகிதம் குறைந்துள்ளதற்கான விளக்கம் கோரப்பட்டது. மாணவ மாணவிகள் நாள்தோறும் தவறாமல் வகுப்பிற்கு வருவதை உறுதி செய்யவும் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. ஆய்வின்போது பள்ளிக்கு உரிய நேரத்தில் வருகை புரியாமலும் எவ்வித தகவல் பள்ளிக்கு தெரிவிக்காமலும் இருந்த ஆசிரியருக்கு விளக்கம் கோரப்பட்டுள்ளது. மேலும் பள்ளியில் தினசரி வருகை பதிவேட்டினை பூர்த்தி செய்யலாமல் இருந்த பள்ளி தலைமை ஆசிரியர் அவர்களிடம் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு வழங்கும் நலத்திட்ட உதவிகள் பள்ளிகளுக்கு வரப்பெற்றவுடன் உடனடியாக மாணவ மாணவிகளுக்கு சென்றடையும் வகையில் காலதாமதம் ஏற்படாமல் உடனுக்குடன் வழங்கிட முன்னேற்பாடுகள் செய்திட வேண்டும். மேலும் NSS, Scout, சுற்றுச்சூழல் ஆகியவற்றின் மூலம் தூய்மையை பற்றிய விழிப்புணர்வு மாணவர்களிடையே ஏற்படுத்தப்பட்டு பள்ளி தூய்மையாக பராமரிக்கப்படுகிறதா என்பதை தலைமை ஆசிரியர்கள் உறுதி செய்திட வேண்டும். மாணவ மாணவிகளுக்கு வழங்கப்படும் சத்துணவு சுகாதாரமாகவும் உரிய அளவில் உரிய நேரத்தில் வழங்கிட தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அரசு பள்ளிகளில் மாணவ மாணவிகளின் சேர்க்கையை அதிகப்படுத்திட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தலைமை ஆசிரியர்கள் மற்றும் அனைத்து பாட ஆசிரியர்களும் இணைந்து குழு அமைத்து தங்களிடம் கல்வி கற்கும் மாணவ மாணவிகளின் நிலைமை அறிந்து அனைவரும் தேர்ச்சி பெறும் வகையிலும் வேலூர் மாவட்டம் கல்வியில் சிறப்பானதொரு இடத்தினை பெற்றிட அனைவரும் பாடுபட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இந்த ஆய்வின் போது முதன்மை கல்வி அலுவலர் திரு.மார்ஸ், பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் கலந்துக் கொண்டனர்.